**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR**

**RLTOP. No.46/*2024***

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tmt. S.Ramalakshmi, Assistant in accordance with the provisions of Act X of 1873 on 16.12.2025

| | | | |
|---|---|---|---|
| Name | எம்பெருமாள் | Religion | இந்து |
| Father Name | | Age | |
| Village | | Calling | |
| Taluk | | | RW2 |

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேன். நான் நிதியாண்டு 2006-2007 ஆண்டிற்கான வருமான வரி கணக்கு செலுத்தி உள்ளேன் . நான் நிதியாண்டு 2006-2012 ஆண்டிற்கான வருமான வரி கணக்கு செலுத்தி உள்ளேன் .நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எனது வீட்டிற்கும் பத்மநாபன் பிள்ளை விட்டிருக்கும் ஒரு கிலோமீட்டர் தூரம் இருக்கும். நாங்கள் இருவரும் ஒரே ஊர் தான். எனது இடம் மோகன் குமார் வீடு அருகில் தான் உள்ளது. 300 அல்லது 400 அடி தூரம் இருக்கும். பத்மநாபன் பிள்ளை எந்த ஆண்டு இறந்து போனார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கொரோனா காலகட்டத்தில் இறந்து விட்டார்.

2. அவர் பக்கவாத நோயால் அவதிப்பட்டு வந்தார். நான் பத்மநாபன் பிள்ளையிடம் நான் பணம் கொடுத்து வந்தேன். பத்மநாபன் பிள்ளையிடம் 2007 ஆம் ஆண்டிலிருந்து பணம் கொடுத்து வந்தேன் அதற்கு உண்டான அக்ரிமெண்ட்

என்னிடம் உள்ளது .இதற்கு உண்டான கிரைய விவரங்களை பத்மநாபன் பிள்ளையிடம் நான் பேசினேன். நான் மோகன் குமரிடம் நான்கில் மூன்று கிரயம் பெற்றுவிட்டேன். நான் பத்திர பதிவுகளை 2012,2013 ஆண்டுகளில் பதிவு செய்தேன். நான் பத்திர பதிவு செய்யும் பொழுது அதில் கட்டிடம் இல்லை என்றால் சரியல்ல. கட்டிடம் இருந்தது அதை நான் சீரமைப்பு செய்தேன். நான் 2007 ஆம் ஆண்டு பணத்தை கொடுத்து முடித்து விட்டேன் என்றால் சரி அல்ல.

3. 2011 ஆம் ஆண்டு தான் நான் பணத்தை கொடுத்தேன் .2011 ஆம் ஆண்டுகள் நான் நான்கு சொத்துகளுக்கும் பணம் கொடுத்து முடித்து விட்டேன் என்றால் சரிதான். அனைத்து தொகையும் பத்மநாதன் பிள்ளை இடம்தான் கொடுத்துவிட்டேன் .நான் கிரயம் பெற்ற மூன்று சொத்துக்களும் ஒன்றாக வரிசையாக உள்ள சொத்து தான் என்றால் சரிதான் . மோகன் குமார் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் அளவு 4050 சதுர அடி என்றால் சரிதான். 9 சென்ட் என்றால் சரிதான். 2011 ஆம் ஆண்டு சொத்து உண்டான பணத்தை கொடுத்துவிட்டு என் கிரையம் பெறவில்லை என்றால் அரசாங்கம் மிக அதிகமான வழிகாட்டுதல் மதிப்பீடு உயர்ந்ததால் நான் கிரையம் செய்யவில்லை .மனுதாரர் சொத்தின் சர்வே எண் 111/5 என்றால் சரிதான்.

4. இந்த சொத்து சாலை ஓரமாக உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சர்வே எண் 111/5 க்கு பத்மநாபன் பிள்ளைக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மூன்று சொத்துக்களையும் பத்மநாபன் பிள்ளையிடம் தான் பவர் ஏஜென்ட் என்ற முறையில் கிரயம் பெற்றேன். நான்

தற்பொழுது பத்மநாபன் மகன்களிடம் நல்ல உறவில் தான் இருந்து வருகிறேன். பத்மநாபன் பிள்ளையின் மகன் விஜய ராஜா பத்திரம் எழுத்தாளராக உள்ளார். பத்மநாபன் பிள்ளை அவரும் பத்திரம் எழுத்தாளராக தான் இருந்து வந்தார். பத்மநாபன் பிள்ளை மனுதாரர் குடும்பத்திற்கு நேர்மையான நபராக அவர் சொத்துகளுக்கு கணக்குப்பிள்ளை பொறுப்பில் இருந்து வந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மனுதாரர் சொத்தில் 2000 ஆண்டிலிருந்து வாடகையாளராக இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

5. மோகன் குமார் தான் எதிர்மனுதாரரை வாடகைக்கு முதலில் அனுமதித்தார் பிறகு 2011 ஆம் ஆண்டு அவரது கணக்கை முடித்துவிட்டு நான் தான் எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு கொடுத்தேன். பத்மநாபன் பிள்ளை இறந்த பின்பு மோகன் குமாருக்கு நான் சொத்துக்களை கிரயம் செய்து கொடுக்க வழக்கறிஞர் அறிவிப்போ பதிவு தபாலோ எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். அவர் எனக்கு குழந்தையிலிருந்து தெரிந்ததால் நான் அதை செய்யவில்லை. 2024 ஆண்டு மோகன் குமார் வழக்கு தாக்கல் செய்த பின்பு நான் ஏதேனும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

6. 2013 ஆண்டு நான் வாடகை ஒப்பந்த பத்திரம் போட்ட பொழுது அதில் மோகன் குமார் கையெழுத்து ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை . வாடகை ஒப்பந்த பத்திரத்தில் கடை எண் 3/171 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்கண்ட வாடகை ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள கடைக்கும் மனுதாரர் சொத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். அது வேற கடை இது வேற

கடையாகும். நான் எதிர்மனுதாரருக்கு கொடுத்த வாடகை பாத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தான 3/163A எந்த விதமான கடையும் இல்லை என்றால் சரியல்ல. மனு சொத்தில் உள்ள கடை எண்3/163 என்றாலும் புதிய என் 3/367 என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது .

7. நான் மனசுத்திற்கு பத்மநாபன் பிள்ளையிடம் எந்த விதமான பணம் கொடுக்கவில்லை என்றாலும் நான் அந்த மூன்று கடைகளை கிரயம் பெற்றுவிட்டு இந்த கடையையும் நான் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் பத்மநாபன் பிள்ளையிடம் நான் வாடகைக்கு வாங்கிய பிறகு அவரிடம் தான் வாடகை செலுத்தி வந்தார். அதுதான் வழக்கமாக இருந்தது என்றால் சரியல்ல. மனு சொத்துக்கு உண்டான ஆவணங்கள் என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 2011 ஆம் ஆண்டு பத்மநாபன் பிள்ளையிடம் கணக்கு பார்த்து அதற்கு உண்டான சொத்துக்கள் மட்டுமே கிரையம் ஆவணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

8. இந்த நாள் வரை கிரைய அக்ரீமெண்ட் பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்று எந்த விதமான நீதிமன்ற உத்தரவும் வாங்கவில்லை என்றால் சரிதான்,2011 ஆம் ஆண்டு அரசு வழிகாட்டுதல் மதிப்பு தொகை கூடுதலாக அதிகமாகிவிட்டது என்பதால் கிரயம் பெறவில்லை என்று சொல்வது உண்மைக்கு புறமானவை என்றாலும் அப்படி உண்மையாக இருந்திருந்தால் மற்ற மூன்று சொத்துக்களை கிரையம் பெற்றிருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. பத்மநாபன் பிள்ளை இறந்த பின்பு நானும் எனது பங்குதாரர் ஏழுமலையும் பத்மநாபன்

பிள்ளையின் மகனான விஜயராஜும் மூன்று நபரும் சேர்ந்து இந்த சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்தோம் என்றால் சரியல்ல.

9. 30.12.2011 அன்று கிரயம் செய்யப்பட்ட சொத்துக்கள் சர்வே எண். 111/6 மற்றும் 111/7 சொத்துக்கள் மட்டும் தான் என்றாலும் மனு சொத்து இருக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்றால் சரி அல்ல. பத்மநாபன் பிள்ளை இறந்த பின்பு தான் நான் சதி திட்டம் தீட்டி சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. இந்த நாள் வரை மனு சொத்துக்கு உண்டான தண்ணி வரி மின் இணைப்பு பட்டா ஆகியவைகள் மனுதாரர் பெயரில் உள்ளது என்றால் இந்த தேதி வரை பதிவு செய்யப்படாததால் அவர் பெயரில் உள்ளது. நான் தகவல் செய்தல்ல முதல் பிரமாணம் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் பொய் என்றால் சரி அல்ல.

<u>மறுவிசாரணை.</u> இல்லை

Sd/-M.N.Rajanandhivarmasiva,
District Munsif cum Judicial Magistrate,
Sholinganallur.